ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# 'பலிபீடம்' நாடகம் - ஓர் ஆய்வு

டே. ஆனி மரிய ஜான்சி
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 18.

70

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் ஒரு சமூகப் பிராணி. ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டிய மனிதன் தமக்குள் முரண்படும் பொழுது சமூகத்தில் பல்வேறு சிக்கல்கள் தலைதூக்குகின்றன. சமூக வரலாற்றைப் பதிவு செய்யும் இலக்கியங்கள் இத்தகைய சிக்கல்களையும் பதிவு செய்யத் தவறுவதில்லை. 'கிரீஷ் கார்னாடி'ன் 'தலெதண்ட' என்ற கன்னட நாடகத்தின் மொழிபெயர்ப்பான பாவண்ணனின் 'பலிபீடம்' என்ற நாடகம் பதிவு செய்யும் சமூக முரண்பாடுகளையும் சிக்கல்களையும் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

கிரீஷ் கார்னாட், தலெதண்ட, பாவண்ணன், பலிபீடம், சாதி, அடக்குமுறை.

**முன்னுரை**

இலக்கியம் என்பது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. "வாழ்க்கையின் பல்வேறு கோணங்களைப் படம் பிடித்துக் காட்டுவதில் நாடகத்திற்கு இணையான வேறு எந்த இலக்கியத்தையும் காட்ட முடியாது"[1] என்பது விஸ்செஸ்டரின் கூற்று. தெருக்கூத்து, வீதிநாடகம் போன்ற வடிவங்களில் இருந்த நாடகங்கள் காலப்போக்கில் எழுத்து வடிவம் பெற்றன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சங்கரதாஸ் சுவாமிகள், பேச்சு வழக்கில் இருந்த நாடகங்களை எழுத்து வடிவம் பெற வைத்தார். அதனைத் தொடர்ந்து ஒரு மொழியில் உள்ள சிறந்த நாடகம், பிற மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டது. பம்மல் சம்பந்த முதலியாரின் காலந்தொட்டுத் தமிழில் மொழிபெயர்ப்பு நாடகங்கள் பெருகின. "மொழிபெயர்ப்பு நாடகங்கள் ஒரு நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், அறிவுநிலை, கருத்துத் தெளிவு ஆகியவற்றை இன்னொரு நாட்டிற்குத் திறந்து காட்டும் வாயில்களாக அமைகின்றன."[2] 'கிரீஷ் கார்னாடி'ன் 'தலெதண்ட' என்ற கன்னட நாடகத்தின் மொழிபெயர்ப்பான பாவண்ணனின் 'பலிபீடம்' என்ற நாடகமும் சமூகத்தைப் பல்வேறு கோணத்தில் படம் பிடித்துக் காட்டுகிறது.

**சமூகம் - ஒரு பார்வை**

மனிதர்கள் இணைந்தது குடும்பம்; பல குடும்பங்கள் இணைந்தது சமூகம். "ஒரே விதமான எண்ணங்களையுடைய மனிதர்கள் தங்களுடைய ஒத்த தன்மையை உணர்ந்து அதன் காரணமாகப் பொதுவான நோக்கங்களை அடையச் சேர்ந்து முயலுகின்ற போது சமூகம் உருவாகிறது" என்பது கிட்டிங்கிஸின் கருத்து. "சாதி சமய வேறுபாட்டால் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வும், பொருளாதார அடிப்படையில் அமைந்துள்ள மேடு பள்ளமும், செய்தொழில் வேற்றுமையால் காணப்படும் தராதரமும் இன்றைய சமூகச் சிக்கல்களுக்கான அடிப்படைக் காரணங்கள் என்று கருதலாம்."[3] 'பலிபீடம்' நாடகமும் இத்தகைய சிக்கல்களையே அடிப்படையாக் கொண்டுள்ளது. இம்மாதிரியான வேறுபாடுகளைப் பெரும்பாலும் இல்லாமல் செய்ய வேண்டிய அறிவு, மனிதனுக்குக் கொடுக்கப்பட

வேண்டும். 'பலிபீடம்' நாடகம் அத்தகைய அறிவைக் கொடுக்கத் தகுதியான ஒரு வாயில் என்பது உறுதி.

**மொழிப்பிரச்சினை**

மொழிப்பிரச்சினை என்பது காலங்காலமாக நமது இந்திய நாட்டில் இருந்துவரக்கூடிய ஒன்று. சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் என ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு மொழியை எதிர்த்துப் போராட்டங்கள், மோதல்கள் நடந்து வருகின்றன. இதற்குக் காரணம், நமது இந்திய மக்கள் அதிலும் குறிப்பாக தென்னிந்திய மக்கள், தனக்குள்ளதையும் கொடுத்து வந்தாரை வாழ வைப்பது போல, பிறருடைய மொழியையும், தனது மொழியின் வீழ்ச்சியைக் குறித்து எண்ணாது வாழ வைக்க முனைவது தான். தமது மொழியை விட பிற மொழிகளே தமக்குப் புகழைத் தேடி தரும் என்ற எண்ணம் மக்களிடையே நிலவுகின்றது. தம் மொழிக்கு அல்லாத பெருமை பிற மொழிகளுக்கு இருப்பதாக மக்கள் கருதுகின்றனர். அதிலும் குறிப்பாக, பிராமணர்களிடம் சமஸ்கிருத மோகம் மேலோங்கி இருந்ததை அறியமுடிகிறது. 'பலிபீடம்' நாடகத்தில் தாமோதரபட்டர், **"சமஸ்கிருத பாஷை இருக்கே, அது வைரத்தாலேயே இழைச்சு கட்டின மாதிரி ஆயிரமாயிரம் வருஷங்களாய்டுச்சு. ஆனா இன்னியவரைக்கும் இலக்கணத்துலே ஒரு எழுத்து மாத்தமில்லை. ஒரு ஒழுங்கு மாத்தமில்லை. ஒரு சின்ன சரிவு இல்லை. உலகத்துக்கு என்னிக்கும் பொருந்தக் கூடிய தத்துவங்களையெல்லாம் சமஸ்கிருதத்திலே தான் எழுத முடியும். சொல்ல முடியும். கன்னடம் அப்படி இல்லை ரொம்ப சாதாரணம்... அது வெறும் ஒரு விபச்சாரி மனோபாவங்களை மாத்திரம் தான் படம் பிடிக்க முடியும். அதனாலதான் மனுஷங்க நாக்குலே சீக்கிரம் படிஞ்சிடுது" (பலி.பக்.92,93)** என்று கூறுவதன் மூலம் பிறமொழி மோகத்தை அறியமுடிகின்றது.

**சாதிப் பாகுபாடு**

சொந்த பந்தங்களோடு மகிழ்ச்சியாக வாழ, விரும்புவோர், சாதியைக் கெட்டியாக பிடித்துக் கொள்ள வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர். அவ்வாறன்றி, சாதியைப் புறக்கணித்தால், உற்றார் உறவினர்களும் புறக்கணித்து விடும் சூழல் உள்ளது. எனவே சாதியை மக்கள் உயிரென எண்ணினர் என்பதை, **"சாதிங்கறது ஒருத்தனுக்கு உடம்புத் தோலு மாதிரி. கிழிச்சி அறுத்துப் போட்டாலும் புத்தோலு மொளைச்சாலும் கூட எல்லார் கண்ணுக்கும் தெரியறது எது தெரியுமா? அதே பழைய சாதி. இவன் பள்ளன். இவன் பறையன். இவன் க்ஷத்திரியன். இவன் பிராமணன்னு" (பலி.பக.35,36)** என்ற பிஜ்ஜளனின் கூற்று உறுதிப்படுத்துகிறது. மேலும் அந்தந்த சாதியினருக்கு ஒதுக்கப்பட்ட தொழில்முறையில் இருந்து எவரும் விலகுவதை மக்கள் விரும்பவில்லை. அவ்வாறு விலகினால் மிகக் கடுமையாக தண்டித்தனர் என்பதை **"வேதத்தை படிச்சா சூத்திரன் காதுல காய்ச்சின ஈயத்தை ஊத்தணும். அவன் நாக்கையே புடுங்கிப் போடணும். ஞானமார்க்கத்துல அவனுக்கு எடமே இருக்கக்கூடாதுன்னும் சொல்லி வச்சிருக்காங்க" (பலி.ப.68)** என்ற பசவண்ணனின் கூற்றின் வழி அறியமுடிகின்றது. ஒரு கட்சியிலிருந்து அடுத்த கட்சிக்குத் தாவும் வழக்கம் இருப்பது போல், முற்காலத்தில் தான் பிறந்த சாதியிலிருந்து வேறொரு சாதிக்கு மாறும் பழக்கம் இருந்ததை அறியமுடிகிறது. ஆனால் வசதியும், செல்வமும் படைத்தோருக்கு மட்டுமே இது சாத்தியமானதாக இருந்துள்ளது. **"பிராமணர்களுக்கு லட்சக்கணக்கா பசுக்களை தானம் செஞ்சு அப்புறமாதான்**

**க்ஷத்திரியர்ன்னு பட்டம் கட்டிக்கிட்டோம்” (பலி.ப.35)** என்ற பிஜ்ஜளனின் கூற்று இக்கருத்தை உறுதி செய்கின்றது.

**சமயப் பிரச்சனை**

மக்கள் தங்கள் சமயத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு, பிற சமயங்களை வெறுப்பதால் ஏற்படும் பிரச்சனைகள் ஆரம்ப காலம் தொட்டே இருந்து வருகின்றன என்பதற்கு **“மட்டூர்லே நம்ம ஆளுங்களுக்கும் அங்கே இருக்கற ஜைனர்களுக்கும் நடுவுலே சின்ன பிரச்சனை. அவுங்க கோயில் சிலைங்களை எல்லாம் இடிச்சி தள்ளிட்டு சிவன்கோயிலாக்கப் போறோம்னு இவுங்க பயமுறுத்தி இருக்காங்களாம்.”(பலி.ப.56)** என்ற பசவண்ணனின் கூற்று சான்றாகும். மேலும் பிறரைத் தங்களது சமயத்திற்கு மாற்ற முனைப்புடன் செயல்படுகின்றனர் என்பதை, **“மொதல் காரியமா இவுங்க எல்லாருக்கும் லிங்க தீட்சை செய்யறது நல்லது பசவண்ணா” (பலி.ப.62)** என்ற குண்டன்னாவின் கூற்றின் வழி அறியமுடிகின்றது. அதேவேளையில் **“இந்த உடம்பிருக்குதே இதுவே கோயில். கால் தான் தூண். தலை தான் கோயில் கலசம். பொருள் ரூபமா இருக்கற எல்லாத்துக்கும் அழிவு உண்டு. ஆத்மா ஒன்னுக்குத்தான் அழிவில்லை”. (பலி.ப.56)** என்ற பசவண்ணனின் கூற்று, எங்கும் நிறைந்துள்ள இறைவன் மனிதனுக்குள்ளும் நிறைந்திருக்கிறார் என்பதனை உணர்த்துகின்றது.

**ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறை**

இக்காலம் மட்டுமன்றி முற்காலத்திலிருந்தே ஆளும் வர்க்கம் மக்கள் மீது அடக்குமுறையைக் கையாண்டுள்ளது என்பதை மஞ்ச்யணக்கிரமித்தனின் **“யோசிக்கற உரிமை அவுங்களுக்கு எதுக்கு? மத ஒழுக்கம், குல ஒழுக்கம், ஜாதி ஒழுக்கப்படி யோசிச்சு முடிவெடுக்க நாம இருக்கும் போது அவுங்களுக்கு அந்த கஷ்டம் வேணாம்…” (பலி.ப.121)** என்ற கூற்றின் வழி உணர முடிகிறது. அதுமட்டுமன்றி, தானே கடவுள் என்பது போன்று அன்றைய அரசர்கள் செயல்பட்டுள்ளனர். ஹிட்லரை விட மோசமான அரசர்கள் காணப்பட்டனர் என்பதற்குப் ‘பலிபீடம்’ நாடகத்தில், சோவிதேவனின், **“ஒவ்வொரு குடிமகனும் வர்ணாசிரம தர்மம், சாதி அமைப்பின் பாதுகாப்புக்காகவும், தன் அரசனின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவும் தம் உயிரைக் கூட தரத் தயாராக இருக்க வேண்டும். ராஜாவே தேசத்தின் முதல் கடவுள்” (பலி.ப.136)** என்ற கூற்று சான்றாக அமைகின்றது. அரசனது கோபத்திற்கு ஆளோனோர், அரச கட்டளையை மீறினோர் ஆகிய அனைவருக்கும் தண்டனை மிகக் கடுமையாக இருந்துள்ளது. ஆண், பெண், குழந்தை என யாராக இருந்தாலும் அரசனது கோபத்திற்கு ஆளானால் கொல்லப்பட்டுள்ளனர். வேட்டை நாய்களை அவர்கள் மீது அவிழ்த்து விடுதல், வீடுகளுக்கு நெருப்பு வைத்தல், நாடு கடத்தப்படல் உள்ளிட்ட பல தண்டனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி காய்ச்சின இரும்பால் கண்களில் குத்தல், கை, கால், உடம்பு எல்லாம் துண்டு துண்டாக வெட்டிப் போடுதல் போன்ற தண்டனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. **“நல்லா காய்ச்சின இரும்பாலே அவுங்க கண்ணுலே குத்திட்டாங்க… ரெண்டு பேரையும் சேத்துக்கட்டி தெருத்தெருவாக இழுத்தாங்க… வழிலே ஏரிகிட்டே வந்ததும் அவுங்க கை, காலு, உடம்பு எல்லாம் துண்டு துண்டா வெட்டி சாகடிச்சிட்டாங்க” (பலி.ப.122)** என்ற குண்டண்ணாவின் கூற்று இதற்குச் சான்றாகின்றது.

**ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி**

சமூகத்தில் ஆணுக்கு ஒரு தர்மமும், பெண்ணுக்கு ஒரு தர்மமும் காணப்படுகின்றது. ஒரே

செயலை இருவரும் செய்வதற்கு இச்சமூகம் அனுமதி தருவதில்லை. தவறைத் தட்டிக் கேட்பதில் ஆண்கள் ஈடுபடலாம். பெண்கள் ஈடுபடக்கூடாது என இச்சமூகம் விதித்துள்ளது. 'பலிபீடம்' நாடகத்தில் ஜகதேவன், அடுத்தவருடைய பிரச்சனையான கஜானா பாதுகாப்பில் ஈடுபட்டு, எந்த தவறும் நடந்து விடாது செயல்பட்டதை ஒத்துக் கொள்ளக்கூடிய சமூகம், பாகீரதி, தனது வரவுக்காக காத்துக் கொண்டிருக்கும் தந்தையின் உயிரைப் பொருட்படுத்தாது, தாமதப்படுத்தக் கூடிய ஜகதேவனைத் தட்டிக் கேட்பதை ஒத்துக்கொள்ளவில்லை என்பதை, **"உங்களுக்கு எதுக்கு ஊரு சங்கதி. உங்க ஆத்துக்காரர் விஷயம் யாருக்கும் தெரியாதுன்னு நெனைச்சிட்டேளா. மொதல்லே அவரைப் போய் கவனிச்சிக்கோங்கோ" (பலி.ப.21)** என்ற ஜகதேவனின் கூற்று உறுதிப்படுத்துகின்றது. பெண் பிறரைச் சார்ந்து வாழக்கூடியவள் என்ற கருத்து பரவலாகக் காணப்படுகின்றது. 'பலிபீடம்' நாடகத்திலும் அம்பக்கா அக்கம் பக்கத்து வீட்டிலிருப்போரின் உதவியை நாடியே வாழக்கூடிய நிலைமை காணப்படுகின்றது. அதுமட்டுமின்றி விதவைப் பெண், தலைமழிக்கப்படுதல் உள்ளிட்ட பல கொடுமைகளுக்கு ஆளாவதையும் பெண் அவளது பிறந்த வீட்டில்தான் தனது கருத்தை வலியுறுத்த வேண்டும். புகுந்த வீட்டில் கூறக் கூடாது என்ற எண்ணம் சமூகத்தில் நிலவுவதையும் 'பலிபீடம்' நாடகம் சித்தரிக்கின்றது. அதே நேரத்தில் அம்பக்கா போன்று, சாதிக் கட்டமைப்பை மீறும் முற்போக்கு சிந்தனை கொண்ட பெண்களும், கங்காம்பிகை போன்று மக்களின் நிலை அறிந்து செயல்படும், தவறைத் தட்டிக் கேட்கும், நகைச்சுவையுணர்வும், சமயோஜித புத்தியும் கொண்டு செயல்படும் பெண்களும் சமூகத்தில் நிலவுகின்றனர் எனப் 'பலிபீடம்' நாடகம் விளக்குகின்றது.

**தலைமுறை இடைவெளியின் முரண்பாடு**

ஒவ்வொரு தலைமுறைக்கும் இடையிலுள்ள காலகட்டத்தில் காலம் மாறுவது போல, சூழலும் மாறிவிடுகின்றது. ஒவ்வொருவருடைய மனநிலையும், ஒவ்வொரு விதத்தில் காணப்படுவதால் முரண்பாடு அதிகமாகக் காணப்படுகின்றது என்பதை, அம்பக்காவின், **"சனாதனம், தர்மம், ஒழுங்கு, பிராமணத்துவம்ன்னு இவர் ஒரு பக்கம் இழுப்பார். சரண தர்மம், லிங்கம், சங்கமம்ன்னு அவன் இன்னொரு பக்கம் இழுப்பான். நடுவுலே ஆத்து பொம்மணாட்டிங்களுக்குத் தான் பிராணன் போய் பிராணன் வருது" (பலி.ப.25)** என்ற கூற்றின் வழி அறியமுடிகின்றது.

**முடிவுரை**

'பலிபீடம்' என்ற நாடகம் 'தலெதண்ட' என்ற கன்னட நாடகத்தின் மொழிப்பெயர்ப்பாக இருந்த போதிலும் கர்நாடக சமூகத்தை மட்டுமின்றி தமிழ்ச் சமூகத்தையும் அப்படியே பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது மகிழ்ச்சிக்கு உரியதாகும். எந்த ஒரு சிக்கலாக இருப்பினும், அதற்கு ஒரு தீர்வு உண்டு. சிறிய சிக்கலுக்குத் தீர்வு எளிதில் கிடைத்து விடும். ஆனால் பெரிய சிக்கலாக இருப்பின், அதற்குத் தீர்வு காண்பது புரட்சியே. சாதிக் கொடுமை உள்ளிட்ட சிக்கலுகளுக்குத் தீர்வு காண்பதும் புரட்சியே. எனவே, ஒரு புரட்சி செய்வதற்கு; அப்புரட்சி வெற்றி பெறுவதற்குக் காலம் தாழ்த்தும்.

**மேற்கோள் குறிப்புகள்**

1. டாக்டர் ந.பிச்சமுத்து, திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், ப.291.
2. டாக்டர் ஏ.என்.பெருமாள், தமிழ் நாடகத்தின் தோற்றமும், வளர்ச்சியும், ப.217.
3. மேலது., ப.157.

**துணைநூற்பட்டியல்**

1. பாவண்ணன், ‘பலிபீடம்’, காவ்யா, கோடம்பாக்கம், சென்னை - 24. மு.ப. - டிசம்பர் 2003.
2. பிச்சமுத்து.ந., ‘திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும்’, சக்தி வெளியீடு, திருவல்லிக்கேணி, சென்னை - 5. ஐ.ப. - 2002.
3. பெருமாள்.ஏ.என்., ‘தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்’, அணியகம், சென்னை - 30. மு.ப. - அக்டோபர் 1977.